

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன்,வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்எல்ஏ, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், சேர்மன் துரைராஜ், ஆனந்த். குடமுருட்டி சேகர், விஜயா ஜெயராஜ் பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ், கமால் முஸ்தபா இளங்கோ, கனகராஜ் மற்றும் புஷ்பராஜ் மூவேந்தரன், துரைப்பாண்டியன் கலைச்செல்வி கவிதா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் (லிட்) திருச்சி மண்டலம் சார்பில் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி மாணவர்கள் அதிகம் பயணிக்கும் காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் மாணாக்கர்கள் மட்டும் எளிதாக பயணம் செய்யும் வகையில் கட்டணமில்லா நகர பேருந்துகளை அமைச்சர்கள் சா.சி சிவசங்கர், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திருவெறும்பூர் பேருந்து நிலையம், காட்டூர் பேருந்து நிலையம், பால்பண்ணை நால்ரோடு பேருந்து நிறுத்தம், ஆகிய இடங்களில் நான்கு பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

*சேலம், டிச. 7-*

*சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு கூட்டம் இன்று*



*(07.12.2025 ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில், எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள, ஸ்ரீ நடராஜன் மஹால் திரு மண மண்டபத்தில்", மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள் :*

*14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றிட, கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தி.மு.க இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து.*

*சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.*

*கழக ஆக்கப்பணிகள் குறித்து.*


*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் இலுப்பூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமையில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும் தஞ்சாவூர் துணை மேயருமான அஞ்சுகம் பூபதி ஒருங்கிணைப்பில் வடக்கு மாவட்ட மருத்துவஅணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஏற்பாட்டில் தொடங்கி வைத்தனர். நிகழ்வில் தென்னலூர் எம்.பழனியப்பன், கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, கோவிந்தராஜன், வை.விஜயகுமார், பேரூராட்சி துணைத் தலைவர் இ.செந்தில்ராஜா, டாக்டர் கே.என்.அமானுல்லா, டாக்டர் தவ.பா.உதயச்சூரியன், டாக்டர் சுகுந்தன், சாங்கிராப்பட்டி ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. சண்முகம்
### டிசம்பர் 7 (2021)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தொண்டர் படையில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பல ஆண்டுகள் தொடர்ந்து கிளைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**திருநரையூர் ஊராட்சி மன்றத் தலைவர், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

உதகை மரபியல் பூங்காவில்

# தமிழ்நாட்டின் முதல் வளர்ப்பு நாய்களுக்கான பராமரிப்பு பூங்கா!

## தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் ஆய்வு!

*நீலகிரி, டிச. 7 -*

*நீலகிரி மாவட்டம் உதகை மரவியல் பூங்கா வளாகத்தில் ரூ.40 லட்சம் செலவில் தமிழகத்தில் முதல்முறையாக அமைக்கப்பட்டுள்ள வளர்ப்பு பிராணியான நாய்களுக்கான பராமரிப்பு பூங்கா விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இப்பூங்காவினை தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் 5.12.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*



*சர்வதேச சுற்றுலா தலமான ஊட்டிக்கு தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்கள், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வரும் சுற்றுலா பயணிகள் சிலர் தங்களது செல்லப் பிராணியான நாயையும் அழைத்து வருகின்றனர். ஆனால் இங்குள்ள பூங்காக்கள், படகு இல்லம் உள்ளிட்ட இடங்களில் நாயை அழைத்து செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் அவற்றை தனியாக அறையில் விட்டு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதை தவிர்ப்பதற்காகவும் ஊட்டியில் நாய்கள் வளர்ப்பவர்கள் அவற்றை தனியாக நடை பயிற்சிக்கு அழைத்துச் செல்வதற்காகவும் நாய்களுக்காக பிரத்தியேக பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டது.*

*இதற்காக ஊட்டி மரவியல் பூங்கா தேர்வு செய்யப்பட்டு அங்கு நாய்களுக்கான பிரத்தியேக பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. சிறுவர் பூங்காவில் விளையாடி மகிழ வசதியாக பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் இருப்பது போல், இங்கு வளர்ப்பு பிராணிகளான நாய்கள் விளையாடி மகிழ புற்களால் அமைக்கப்பட்ட சுரங்கப்பாதை, சிறு குளம், ஸ்பிரிங்லர் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*இதுதவிர குப்ரஸ் மரங்களை கொண்டு அலங்கார வேலி உள்ளிட்டவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திரா மாநிலம், ஐதராபாத்தில் நாட்டிலேயே முதன்முதலில் நாய்களுக்காக பிரத்தியேக பூங்கா அமைக்கப்பட்டது. தமிழகத்தில் சென்னை மயிலாப்பூரில் நாய்களுக்கு பிரத்தியேக பூங்கா அமைக்க அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை பயன்பாட்டுக்கு வரவில்லை. அந்த வகையில் தமிழகத்தில் நீலகிரி மாவட்ட ஊட்டியில் முதல் முறையாக நாய்களுக்கான பூங்கா பயன்பாட்டிற்கு வர உள்ளது. அனைத்து பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது.*

*இதுகுறித்து தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கூறியதாவது,*

*திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில், மலை மாவட்டமான நீலகிரி உதகை மரவியல் பூங்காவில் ரூ.40 லட்சம் செலவில் வளர்ப்பு பிராணியான நாய்களுக்கான பிரத்தியேக பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இது நாய்களுக்கு மிகப் பெரிய புத்துணர்வு மையமாக இருக்கும். பூங்காவில் வழக்கமாக நடைபயிற்சி செய்பவர்கள் தொந்தரவு செய்யாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக செல்லப்பிராணி பூங்கா வேலி அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி, குப்பைத் தொட்டிகள் மற்றும் நாய்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாய்களை அழைத்து வருபவர்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்ய கூடாதவை குறித்த அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. செல்லப்பிராணி பூங்காவிற்கான நுழைவு கட்டணம் குறித்து நிர்வாகம் இன்னும் முடிவு செய்யவில்லை.*

*இது மாதாந்திர அல்லது வருடாந்திர பாஸ் ஒன்றை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, தோட்டக்கலைத் துறை சார்பில் மரவியல் பூங்காயசெல்ல ரூ.10 நுழைவு கட்டணமாக வசூலிக்கிறது. தோட்டக்கலை, வருவாய் மற்றும் நகராட்சித் துறைகளின் உறுப்பினர்கள் மற்றும் பிராணிகள் நல சங்க பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு துணைக் குழு அமைக்கப்பட உள்ளது. நாய்கள் பராமரிப்பு பூங்காவிற்காக வசூலிக்கப்படும் நுழைவு கட்டணம் பூங்காவின் பராமரிப்புக்குப் பயன்படுத்தப்படும் என அவர் கூறினார்.*

*இந்நிகழ்வில் மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அவைத்தலைவர் போஜன், உதகை தெற்கு ஒன்றிய (மேற்கு) செயலாளர் ஜெகதீஷ், மற்றும் தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் நகராட்சி அலுவலர்கள் உட்பட அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி. வாசு
### டிசம்பர் 7 (2014)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டக் கழகப் பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சென்னை துறைமுக அறக்கட்டளை உறுப்பினராகவும், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**